**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: S. T.C. 03/2018**
**Deposition of witness for prosecution -DW- 1**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சரவணபாண்டி |
| Father Name | : | திரு. பாண்டியராஜ் |
| Village | : | மதுரை |
| Taluk | : | மதுரை வடக்கு |
| Calling | : | இராமநாதபுரம் சிட்டி யூனியன் வங்கியில் சீனியர் மேனேஜர் |
| Religion | : | இந்து |
| Age | : | 39 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 18 th day of March 2022.

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது இராமநாதபுரம் சிட்டி யூனியன் வங்கியின் சீனியர் மேனேஜர் ஆக பணிபுரிந்து வருகிறேன். மேற்சொன்ன வங்கியில் பணிபுரிகிறேன் என்பதை நிரூபிக்க அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது) எ.த.சா.ஆ 1 ஆகும். வழக்கின் எதிரி பாலசுப்பிரமணியன் என்பவர் எங்கள் வங்கியில் 04.04.2012 ல் வங்கி கணக்கை தொடங்கியுள்ளார். அது சேமிப்பு கணக்கு ஆகும். ம.த.சா.ஆ 1 எங்கள் வங்கியின் காசோலை அது வங்கியில் செலுத்தப்பட்டு அது CTS ஜெக் என்பதால் கிளையரன்ஸ்க்காக சென்னை சர்வீஸ் வங்கிக்கு அனுப்பப்பட்டு அந்த கணக்கில் பணம் இருந்தால் மட்டும் அந்த காசோலை ஏற்றுக்கொள்ளப்படும் அவ்வாறு இல்லை என்றால் உடனே திருப்பப்பட்டுவிடும். அவ்வாறு திருப்பப்பட்ட காசோலை 03.08.2017 ல் வங்கிக்கணக்கில் பணம் இல்லை என்று சர்வீஸ் வங்கியால் திருப்பப்பட்டுள்ளது. அவ்வாறு திருப்பப்பட்டதற்குண்டான அறிவிப்பு மட்டும் எங்கள் வங்கிக்கு வரும். அவ்வாறு 03.08.2017 ல் மேற்சொன்ன காசோலை திருப்பப்பட்டதாக அறிவிப்பு வந்தது. அவ்வாறு திருப்பப்பட்டதற்குண்டான வங்கி பதிவேட்டின் நகல் எ.த.சா. ஆ 2 ஆகும். (சீனியர் வங்கியின் மேலாளர் கையொப்பம் இடப்பட்டுள்ளது) ம.த.சா. ஆ 1 ஆன காசோலையில் கணக்கு தொடங்கப்பட்ட வாடிக்கையாளரின் பெயர் பாலசுப்பிரமணியன் ஆவார். ஆனால் ம.த.சா.ஆ 1 ல் கையொப்பம் இடப்பட்டுள்ள நபர் ஏ.கே. பாலகிருஷ்ணன். பாலகிருஷ்ணன் மற்றும் பாலசுப்பிரமணியன் என்பவர்களின் விலாசம் க/எ-1 வள்ளல் பாரி வடக்குத்தெரு, வெளிப்பட்டிணம், இராமநாதபுரம் என்ற விலாசம் கொண்ட நபர்கள் ஆவார்கள். பாலசுப்பிரமணியன், ஏகே. பாலகிருஷ்ணன் ஆகியோர் வங்கி கணக்கு தொடங்கும்போது கொடுக்கப்பட்ட விண்ணப்பம் மற்றும் கணக்கு தொடர்பான ஆவணங்கள் எ.த.சா.ஆ 3 ஆகும். (18 தாள்கள் சீனியர் வங்கியின் மேலாளர் கையொப்பம் இடப்பட்டுள்ளது) ம.த.சா.ஆ 1 ல் உள்ள கையொப்பமும் எங்கள் வங்கியில்

தொடங்கப்பட்ட வங்கி கணக்கு எண். 175001000514837 விண்ணப்பத்தில் வி.கே. பாலகிருஷ்ணன் என்பவர் கொடுத்த விண்ணப்பத்தில் உள்ள கையொப்பமும் ஒன்றாக உள்ளது. (புகார்தாரர் தரப்பில் கணக்கு தொடங்கப்பட்ட விண்ணப்பம் நகல் என்பதால் அசலை பார்த்து தான் அவருடைய கையொப்பம் தானா என்றும் இல்லை என்றும் தெரிய வரும் என்ற ஆட்சேபணையின் பெயரில் பதிவு செய்யப்படுகிறது. பாலசுப்பிரமணியன் என்பவரின் வங்கி கணக்கு எண். 175001001498562.

<u>புகார்தாரர் தரப்பில் கு.விசாரணை</u>

காசோலையானது மாற்றுமுறை ஆவணம் வங்கியில் பணத்தை பறிமாற்றம் செய்வதற்காக கொடுக்கப்படும் ஒரு ஆவணம் என்றால் சரிதான். யார் வங்கியில் கணக்கு வைத்துள்ளார்களோ அவர்களுக்கு மட்டும் தான் காசோலை வழங்கப்படும் என்றால் சரிதான். பாலசுப்பிரமணியன் என்பவர் எங்கள் வங்கியில் கணக்கு தொடங்கப்பட்டு காசோலை வழங்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த காசோலையை எந்த வகையில் கொடுப்போம் என்றால் பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்புவோம். அந்த காசோலை திருப்பப்பட்டால் கணக்காளருக்கு தகவல் தெரிவித்து நேரடியாக வந்து வங்கியில் பெற்றுக்கொள்ளும்படி கூறுவோம். இந்த காசோலைகளை அவர் தபால் மூலமாக பெற்றுள்ளார் என்றால் அது குறித்து எனக்குத்தெரியாது. தபால் மூலமாக பெறாமல் வங்கியில் நேரடியாக வந்து பெற்றிருந்தால் அதற்குண்டான ஆவணமும் எங்கள் வங்கியில் தான் இருக்கும் என்றால் சரிதான். அந்த நபர் அல்லாத வேறொரு நபருக்கு காசோலை புத்தகத்தை வழங்கமாட்டோம் என்றால் காசோலை புத்தகத்தை வாங்குவதற்கு அவருக்கு அதிகாரம் கொடுத்திருந்தால் அதன் அடிப்படையில் அந்த நபரிடம் கொடுப்போம். அவ்வாறு காசோலைகளை பாலசுப்பிரமணியன் என்பவருக்கு தபால் மூலமாக அனுப்பப்பட்டதா அதிகாரம் பெறப்பட்ட நபரிடம் வழங்கப்பட்டதா என்ற விபரம் வங்கியில் உள்ள ஆவணங்களை பார்த்து தான் சொல்ல முடியும். ஒரு நபரின் காசோலை தொலைந்து விட்டால் அந்த காசோலை தொலைந்து விட்டது என்றும் அந்த காசோலைக்கு உண்டான பண பரிவர்த்தனையை நிறுத்தி வைக்க சொல்லி கடிதம் ஒன்று கொடுத்து நிறுத்தி வைக்கலாம் என்றால் ஆமாம். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட காசோலைக்கு பண பரிவர்த்தனையை நிறுத்த சொல்லி எதாவது கடிதம் வழங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. காவல் துறையினரிடம் காசோலை தொலைந்து போய் விட்டது என்று தகவல் ஏதேனும் எங்கள் வங்கிக்கு வந்ததா என்றால் இல்லை. நான் கையொப்பம் ஒப்பீடு செய்வதற்கு உண்டான படிப்பு எதுவும் படிக்கவில்லை என்றால் சரிதான். ஒரே முகவரியில் இரண்டு நபர்கள் வங்கி கணக்கு தொடங்குவதற்கு எங்கள் வங்கியில் ஆட்சேபணை செய்வார்களா என்றால் இல்லை. இரண்டு நபர்களும் ஒரே முகவரியில் வங்கி கணக்கு தொடங்குவதற்கு என்ன ஆதாரம் கொடுத்துள்ளார்கள் என்றால் பாலசுப்பிரமணியன் என்பவர் அவருடைய அப்பாவின் தேர்தல் அடையாள அட்டை மற்றும் ஓட்டுநர் உரிமத்தை ஆதாரமாக கொடுத்துள்ளார். வி.கே பாலகிருஷ்ணன் என்பவர் ரேஷன் அட்டையை கொடுத்துள்ளார். பாலசுப்பிரமணியன் என்பவர் தான் தான் பாலசுப்பிரமணியன் என்பதை காண்பிக்க ஆதாரம் எதாவது கொடுத்துள்ளாரா என்றால் தேர்தல் வாக்காளர் புகைப்படம் ஒட்டிய பட்டியல் சீட்டு கொடுத்துள்ளார். அதனை ஒரு நபரின் தனிநபர் அடையாளமாக ஏற்றுக்கொள்ளமுடியாது என்றால் ஆமாம் என்று கூறிவிட்டு தற்போது சாட்சி

ஏற்றுக்கொள்ளலாம் என்று கூறுகின்றார். ஒருவர் வங்கி கணக்கை தொடங்குவதற்கு என்ன ஆவணங்களை கொடுக்க வேண்டும் என்ற பட்டியலில் தேர்தல் வாக்காளர் புகைப்படம் ஒட்டிய பட்டியல் சீட்டு ஆதாரமாக உள்ளதா என்றால் இல்லை. ஓட்டுநர் உரிமத்தில் உள்ள முகவரி விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள முகவரியில் ஒன்றுதானா என்றால் இல்லை. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட காசோலை யாருக்கு எந்த தேதியில் வழங்கப்பட்டுள்ளது என்ற ஆவணம் எங்கள் வங்கியில் தான் உள்ளது என்றால் ஆமாம். அதை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த முடியுமா என்றால் முடியும் காலஅவகாசம் வேண்டும்.

(சாட்சி ஆவணத்தை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய காலஅவகாசம் வேண்டும் என்பதன் அடிப்படையில் புகார்தாரர் தரப்பில் கு.விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)